## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்த

# தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவுத் திட்டம்!

## ஆங்கில நாளேடுகள் படப்பிடிப்பு!






விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, தேவாங்கர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை/பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் 2025–2026ன் கீழ் , மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஒ.சுகபுத்ரா, தலைமையில் 11 ஆம் வகுப்பு பயிலும் 419 பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார்.




நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதியில் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு இளைஞரணி சார்பில் செய்ய வேண்டிய பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நெல்லை மேற்கு மாவட்டபொறுப்பாளர்இரா.ஆவுடையப்பன்தலைமையில்நடைபெற்றது.மாவட்டஇளைஞரணிஅமைப்பாளர்ஜான்ரபீந்தர்வரவேற்புரையாற்றினார். நிகழ்வில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் வேல்முருகன், ஆகாஷ்,மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், வி.கே.புரம் நகர இளைஞரணி அமைப்பாளர் நகராட்சி தலைவர் செல்வ சுரேஷ் பெருமாள் உள்பட துணை அமைப்பாளர்கள்,ஒன்றிய நகர,பேரூர்,துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.இந்தக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை.எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டது.




கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தகுதியுள்ள வாக்காளர்கள் எவரும் விடுபடாத வகையில் பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தியதற் கிணங்க மதுரை மாநகர் மாவட்ட திமுக தெற்கு வாசல் பகுதி 53 வது வட்ட திமுக சார்பாக தேர்தல் ஆணையத்தின் எஸ் ஐ ஆர் பணிகள் தொடர்பாக வாக்காளர்களுக்கு உதவும் வகையில் சிறப்பு உதவி மையத்தினை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் மூவேந்திரன், பகுதி செயலாளர் பா. ரமேஷ் குமார் என்ற ஜீவன், வட்டச் செயலாளர்கள் எஸ். அசோக் பாபு, முகமது இஸ்மாயில், பி.வி.எஸ்.சேகர் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் மற்றும் வாக்காளர்கள் பங்கேற்றனர்.



பாளையங்கோட்டை மத்திய ஒன்றியம் கீழப்பாட்டம் பாகம் எண் 158,159–ல் வாக்காளர் கணக்கீட்டு படிவம் நிரப்பும் முகாமை நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆய்வு மேற்கொண்டார்.நிகழ்வில் பாளை மத்திய ஒன்றிய செயலாளர் போர்வல் கணேசன்,தெற்கு ஒன்றிய செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ், ஆதிபரமேஸ்வரன்,இசக்கிபாண்டி, வீரபாண்டி,தளவாய்,செல்லத்துரை, ஆறுமுகம், முருகன்,சுரேஷ் பாக்கியம், சுரேஷ்,சரவணன்,சந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



விளாத்திகுளம் வேம்பார் சாலையில் கடந்த வாரம் பணியின் போது சாலை விபத்தில் உயிரிழந்த வேலிடுபட்டி கிராமத்தைச் சேர்ந்த தற்காலிக தூய்மை பணியாளர் மாரியம்மாள் அவர்களின் குடும்பத்தாருக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்த ரூ.3லட்சம் அடங்கிய காசோலையை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன் குடும்பத்தாரிடம் வழங்கி ஆறுதல் கூறினார். உடன் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, மாவட்ட பிரதிநிதி ராமலிங்கம், கிளைச் செயலாளர் வீரப்பெருமாள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.